# EASTERN UNIVERSITY, SRI LANKA

stern Univers

## PART 11 EXAMINATION IN COMMERCE/BUSINESS ADMINISTRATION 1998/99 (Oct/Nov'2000)

## COM 301 Management Accounting

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. I. "சில நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படுமிடத்து ஒரு பாதீடானது(Budget) வெற்றிகரமான பாதீட்டு முறைமையை (Budgeting System) கொண்டிருக்கும் எனக் கூறப்படுகின்றது." அத்தகைய நிபந்தனைகளில் 4 கைக் குறிப்பிடுக?

(04 புள்ளிகள்)

II. ஒரு நிறுவனத்தின் கிரயம் 200,000 ரூபாவாகவும், விற்பனை 250,000 ரூபாவாகவும் காணப்பட்டதுடன் அதன் சொத்துப்புரள்வு வீதம் 4 ஆகக் காணப்பட்டது. சொத்தில் வருவாய்வீதம் எவ்வளவு என கணிப்பிடுக (Rate of return on Asset)

(04 புள்ளிகள்)

III. ஒரு கம்பனியானது 100,000 ரூபா உற்பத்திக் கிரயத்தைக்கொண்டதும், தற்போது உபயோகமற்றுப் போகக்கூடியதுமான நிலையிலுள்ள 100 பழைமையடைந்த இயந்திர உதிரிப்பாகங்களை இருப்பாக வைத்துள்ளது. இவை கீழ்வரும் இருமுறைகளில் பெறுமதியிடப்படலாம்.

(அ) 30,000 ரூபா செலவில் மீளவும் இயந்திரத்திலிட்டு திருத்தி 50,000 ரூபாவிற்கு விற்பனை செய்யலாம். அல்லது

(ஆ) 5000/= விற்கு எஞ்சிய பெறுமதியாக பெறுமதியிடலாம் (Scrap value)

இம்முறையில் எது சிறந்தது? (04 புள்ளிகள்)

IV. ஒரு கம்பனியினது விற்பனையும் இலாபமும் (இரு காலப்பகுதிகளிற்குரியது) கீழே வழங்கப்பட்டுள்ளது.

| காலப்பகுதி | விற்பனை | இலாபம் |
|---|---|---|
| I | 100,000 | 10,000 |
| II | 150,000 | 20,000 |

(அ) சமப்பாட்டுப்புள்ளி(Break even point) இனைக் கணிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ஆ) 40,000 ரூபா இலாபத்தினை உழைப்பதற்கு விற்பனை எந்த அளவாக இருக்க வேண்டும்?

(03 புள்ளிகள்)

(இ) விற்பனை 120,000 ரூபாவாக இருக்குமிடத்து இலாபம் எவ்வளவாக இருக்கும்? (03 புள்ளிகள்)

(மொத்தம் 08 புள்ளிகள்)

V. மரியா ஜோசேப் ஒரு பாரிய கணக்கியல் நிறுவனத்தில் 50,000 ரூபா சம்பளத்தில் கணக்காளராக தொழிலாற்றி வருகிறார். இதேவேளை தான் சொந்தமாக தனிப்பட்ட கணக்கியல் சேவையொன்றை ஆரம்பிக்கலாம் என்ற ஆர்வமும் இவரிடம் உள்ளது. அவ்வாறு சொந்தப் பயிற்சியை ஆரம்பிக்குமிடத்து அது 130,000 ரூபா செலவை ஏற்படுத்துவதுடன் 200,000 ரூபாவை வருமானமாகவும் கொடுக்கும். அவர் மாதாந்தம் 20,000 ரூபாவை தனது தங்குமிட வசதிக்காக செலுத்தும் வழக்கமுடையவர்.

மரியா தனது சொந்த சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக உமது கருத்துரை என்ன?

(04 புள்ளிகள்)

VI. ஒரு விலையிடல் தீர்மானத்தை எடுக்குமுன்பு கவனத்தில் எடுக்கப்படவேண்டிய காரணிகள் யாவை?

(04 புள்ளிகள்)

VII. கீழே தரப்பட்டுள்ள தகவல்களைப் பயன்படுத்தி இணைவுச் செம்மையாக்கலை கணிப்பிடுக.

| | 01.01.1990 | 31.12.1990 |
|---|---|---|
| தொகுதிக்கடன் | 25,000 | 30,000 |
| வங்கி மேலதிகப்பற்று | 15,000 | 20,000 |
| காசு | 2,500 | 5,000 |
| பொது ஒதுக்கம் | 7,500 | 12,500 |
| முன்னுரிமைப் பங்குகள் | 30,000 | 40,000 |
| சாதாரண பங்குகள் | 37,000 | 50,000 |
| விற்றசரக்கின்கிரய செம்மையாக்கல் | | 5,000 |
| நாணய தொழிற்படு மூலதன செம்மையாக்கல் | | 3,750 |
| பெறுமானத் தேய்வுச் செம்மையாக்கல் | | 1,250 |

(04 புள்ளிகள்)

20 AUG 200
Eastern University, Sri

VIII நிதித்திட்டமிடலின் முக்கியத்துவங்கள் யாது?

(04 புள்ளிகள்)

IX. நிறுவனமொன்று ரூபா 37,386/= வான இயந்திரத்தினை கடன்மூலம் கொள்வனவு செய்வது பற்றி பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது. தேவைப்படுகின்ற நிதியானது பத்துவருடங்களில் சமமான தவணைக் கட்டணங்களாக செலுத்தப்படத்தக்க 5% கடன்மூலம் ஒழுங்கு செய்யப்பட முடியும். மேற்சொன்ன தகவல்களின் அடிப்படையில் வருடாந்த தவணைக் கொடுப்பனவினைத் தீர்மானிக்குக.

(04 புள்ளிகள்)

02. " இலாபத்தன்மை, திரவத்தன்மை (Profitability & Liquidity) என்ற இரண்டும் இல்லாமல் ஒரு வங்கியானது நிலைத்திருக்க முடியாது."என்று பிரட்மன் கருதுகின்றார்.

(a) பிரட்மனின் கருத்துரையை நீர் ஏற்றுக்கொள்கிறீரா? ஏன்?
(03 புள்ளிகள்)

(b) ஒரு நிறுவனத்தின் இலாபத்தன்மை என்பதனால் நீர் கருதுவது யாது? அதனை நீர் எவ்வாறு அளவிடுவீர்?
(04 புள்ளிகள்)

(c) ஒரு நிறுவனத்தில் மேலதிக திரவத்தன்மை(excess liquidity) காணப்படும்போது ஏற்படும் பிரச்சனைகள் யாவை?
(04 புள்ளிகள்)

(d) நிறுவனங்களிற்கிடையில் (Interfirm) விகித பகுப்பாய்வு ஒப்பீடு செய்வதன் நன்மைகள் யாவை?
(04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

03. அனோமா வியாபாரக் கம்பனியானது 5/= பெறுமதியான 100,000 சாதாரண பங்குகளை 2/= பங்குவட்டத்துடன் வழங்குவதன் மூலமும், 15,000 10% தொகுதிக்கடன் ஆவணங்களை 12/= விலையில் விற்பனை செய்வதன்மூலமும் சிறுவியாபாரமொன்றை ஆரம்பிக்கின்றது. மேலதிக நிதி தேவைப்படும்போது கம்பனியானது தனக்குக்கிடைக்கும் ரூபா 75,000 வரையான உச்ச வங்கி மேலதிகப்பற்றினை பயன்படுத்துவதற்கும் அதுவும் போதுமானதாக இல்லாதபட்சத்தில் ஒவ்வொன்றும் 10 ரூபாவான 10% முன்னுரிமைப் பங்குகளை வழங்குவதன்மூலம் நிதியைப் பெற்றுக்கொள்வதற்கும் தீர்மானித்திருக்கின்றது.

170,000 ரூபா பெறுமதியான நிலையான சொத்துக்கள் முதலாவது வருடத்தில் கொள்வனவு செய்யப்படும். பின் ஒவ்வொரு வருட பெறுமதியிலிருந்தும் 20%. இனால் நிலையான சொத்துக்கள் அதிகரித்துச் செல்லும். தேய்வு நேர்கோட்டு முறையில் 15% ஆகும். ஒரு அலகு விற்பனைக்கான கிரயம் 3 ரூபாவாகும். ஒரு அலகின் விற்பனை விலை 5 ரூபாவாகும்.